| R3485 |
|---|

| Sub. Code |
|---|
| 411301 |

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2025

## Third Semester

## Tamil

## காப்பிய இலக்கியம்

## (CBCS – 2022 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 1 = 10)

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

1. வஞ்சிக்காண்டத்தில் அமைந்துள்ள காதைகள் எத்தனை (CO1, K1)

   (அ) 6 (ஆ) 4

   (இ) 5 (ஈ) 7

2. எந்த மன்னன் முன் கண்ணகியின் வரலாறு எடுத்துரைக்கப்படுகிறது (CO1, K1)

   (அ) சேரன் செங்குட்டுவன்

   (ஆ) விக்கிரம சோழன்

   (இ) உதியன் சேரலாதன்

   (ஈ) இரண்டாம் இராசேந்திரன்

3. மணிமேகலையின் தோழி யார்? (CO2, K1)

   (அ) மாதவி (ஆ) சுதமதி

   (இ) ஆதிரை (ஈ) மணிமேகலா

4. சீவக சிந்தாமணி தோன்றிய காலம் எது? (CO2, K2)

(அ) சோழர் (ஆ) சேரர்

(இ) பாண்டியர் (ஈ) பல்லவர்

5. சீவகனின் தந்தை யார்? (CO2, K1)

(அ) கந்துக்கடன் (ஆ) சச்சந்தன்

(இ) அச்சணந்தி (ஈ) நந்தட்டன்

6. சுந்தர காண்டத்திலுள்ள படல எண்ணிக்கை யாது? (CO3, K1)

(அ) 11 (ஆ) 13

(இ) 14 (ஈ) 12

7. பெரியபுராணம் இயற்றப்பட்ட நூற்றாண்டு எது? (CO3, K2)

(அ) கி.பி. 11 ஆம் நூற்றாண்டு

(ஆ) கி.பி. 12 ஆம் நூற்றாண்டு

(இ) 13 ஆம் நூற்றாண்டு

(ஈ) 10 ஆம் நூற்றாண்டு

8. பெரியபுராணத்தின் முக்கியத்துவம் எது? (CO4, K2)

(அ) சமய வளர்ச்சி (ஆ) சமய நல்லிணக்கம்

(இ) சமூக நீதி (ஈ) இவை அனைத்தும்

9. சீறாப்புராணம் காலம் யாது? (CO4, K1)

(அ) 17 ஆம் நூற்றாண்டு

(ஆ) 18 ஆம் நூற்றாண்டு

(இ) 15 ஆம் நூற்றாண்டு

(ஈ) 13 ஆம் நூற்றாண்டு

10. சின்னசீறா நூலினை இயற்றியவர் யார்? (CO5, K1)

(அ) பனு அகமது மரைக்காயர்

(ஆ) நூர் அகமது

(இ) குலாம் காதிர்

(ஈ) மஸ்தான் சாகிபு

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

11. (அ) கண்ணகியின் வழிபாடு குறித்து விளம்புக. (CO1, K2)

(அல்லது)

(ஆ) ஆபுத்தின் பிறப்புக் குறித்து எழுதுக. (CO1, K2)

12. (அ) "குணமாலை–சுமரஞ்சரி" உரையாடலைப் பகர்க. (CO2, K1)

(அல்லது)

(ஆ) சுரமஞ்சரி அழகினைக் குறித்து இயம்புக. (CO2, K1)

13. (அ) சீதையை இராமனிடம் சேர்ப்பேன் என அனுமன் கூறியவற்றை எழுதுக. (CO3, K1)

(அல்லது)

(ஆ) வில்லிபுத்தூராழ்வாரின் படைப்பாக்கத் திறனை பதிவு செய்க. (CO3, K2)

14. (அ) பெரியபுராணம் பற்றி இயம்புக. (CO4, K4)

(அல்லது)

(ஆ) கண்ணப்ப நாயனாரின் தூய்மைப் பக்தி குறிப்பிடுக. (CO4, K4)

15. (அ) தேம்பாவணி குறிப்பு வரைக. (CO5, K1)

(அல்லது)

(ஆ) இறைவனின் திருதூதராக நபி குறித்து எழுதுக. (CO5, K1)

## பகுதி இ (5 × 8 = 40)

அனைத்து வினாக்களுக்கும் 1000 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

16. (அ) இந்திர விழா குறித்து கட்டுரை வரைக. (CO1, K1)

(அல்லது)

(ஆ) மணிமேகலைக்கு அமுதசுரபி பாத்திர கிடைத்தது குறித்து தொகுத்துரைக்க. (CO1, K1)

17. (அ) சீவகனின் புதுமணக் கோலத்தைக் குறித்து எடுத்துரைக்க. (CO2, K1)

(அல்லது)

(ஆ) சுரமஞ்சரி இலம்பகம் கட்டுரைக்க. (CO2, K2)

18. (அ) அனுமன் சீதையைக் கண்ட நிகழ்வினை விளக்கியுரைக்க. (CO3, K4)

(அல்லது)

(ஆ) வில்லிபாரதம் கட்டுரை வரைக. (CO3, K1)

19. (அ) கண்ணப்பநாயனார் சிவனின் திருவுருவத்தின் மீது அன்பு குறித்து விவரிக்க. (CO4, K4)

(அல்லது)

(ஆ) இறைவனை வழிபடுவதில் எவ்வித தடையும் இல்லை என்பதை கண்ணப்பநாயனார் வழி விளக்கியுரைக்க. (CO4, K4)

20. (அ) தேம்பாவணி காட்சிப்படலம் உணர்த்தும் கருத்தினை எடுத்துரைக்க. (CO5, K1)

(அல்லது)

(ஆ) நபிகள் நாயகத்துக்கு நபி பட்டம் வழங்கப்பட்ட நிகழ்வு குறித்து எடுத்தியம்புக. (CO5, K1)

————————

| R3486 |
|---|

| Sub. Code |
|---|
| 411302 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2025

### Third Semester

தமிழ்

தொல்காப்பியம் – பொருளதிகாரம் (முன்னைந்து இயல்கள்)

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 1 = 10)

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இரங்கலும் இரங்கல் நிமித்தமும் எந்நிலத்திற்குரிய உரிப்பொருள்? (CO1, K1)

   (அ) நெய்தல் (ஆ) முல்லை

   (இ) பாலை (ஈ) குறிஞ்சி

2. புலி எத்திணைக்குரிய கருப்பொருள்? (CO1, K1)

   (அ) முல்லை (ஆ) குறிஞ்சி

   (இ) நெய்தல் (ஈ) பாலை

3. வஞ்சித்திணையின் துறைகள் எத்தனை? (CO2, K1)

   (அ) 15 (ஆ) 12

   (இ) 18 (ஈ) 13

4. 'தழிஞ்சி' என்னும் துறை எத்திணைக்குரியது? (CO2, K2)

   (அ) உழிஞை (ஆ) தும்பை

   (இ) வஞ்சி (ஈ) காஞ்சி

5. பாங்கர் நிமித்தம் ________ என்ப. (CO3, K1)

(அ) 12 (ஆ) 14

(இ) 13 (ஈ) 9

6. தலைவி கூற்று நிகழ்த்தும் இடங்கள் எத்தனை? (CO3, K1)

(அ) 36 (ஆ) 58

(இ) 28 (ஈ) 12

7. பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ________ யாத்தனர் காரணம் என்ப. (CO4, K1)

(அ) நுந்தை (ஆ) நற்றாய்

(இ) செவிலி (ஈ) ஐயர்

8. கூத்தர் ________ வகையான வழிமுறைகளில் ஊடலைத் தணிப்பர். (CO4, K1)

(அ) எட்டு (ஆ) ஒன்பது

(இ) ஆறு (ஈ) நான்கு

9. நான்கு வகை மகளிர்க்கு பொருந்தாத பண்பு எது? (CO5, K1)

(அ) உயிர் (ஆ) நாணம்

(இ) அச்சம் (ஈ) பேதமை

10. ________ தானே உரிப்புறத் ததுவே. (CO5, K1)

(அ) உள்ளுறை (ஆ) உவமை

(இ) உவமானம் (ஈ) இறைச்சி

**பகுதி ஆ** (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

11. (அ) திணைகளுக்குரிய முதல், உரிப்பொருள் குறித்து எழுதுக. (CO1, K1)

(அல்லது)

(ஆ) நற்றாய்க்குக் கூற்று நிகழும் இடங்கள் யாவை? (CO1, K1)

12. (அ) பாடாண் துறைகள் பற்றி எடுத்துரைக்க. (CO2, K2)

(அல்லது)

(ஆ) தும்பைத்திணை என்றால் என்ன? அதன் துறைகளுள் மூன்றனை விளக்குக. (CO2, K4)

13. (அ) களவில் தலைவியிடத்து நிகழும் மெய்ப்பாடுகள் யாவை? (CO3, K1)

(அல்லது)

(ஆ) களவொழுக்கத்தில் செவிலி கூற்றுகள் குறித்து எழுதுக. (CO3, K2)

14. (அ) கூத்தர் கூற்றுகள் யாவை? (CO4, K1)

(அல்லது)

(ஆ) 'யாத்த சிறப்பின் வாயில்கள்' யாவர்? (CO4, K2)

15. (அ) தோழி அறத்தொடு நிற்றல் குறித்து விளக்குக. (CO5, K4)

(அல்லது)

(ஆ) உள்ளுறை, இறைச்சி பற்றி எடுத்துரைக்க. (CO5, K4)

## பகுதி இ $(5 \times 8 = 40)$

அனைத்து வினாக்களுக்கும் 1000 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

16. (அ) ஐந்திணைகளுக்குரிய கருப்பொருள்கள் குறித்துக் கட்டுரை வரைக. (CO1, K2)

(அல்லது)

(ஆ) அகத்திணையியல் 'தோழி' குறித்து விரித்துரைக்க. (CO1, K2)

17. (அ) வஞ்சித்திணையின் துறைகள் குறித்துக் கட்டுரைக்க. (CO2, K4)

(அல்லது)

(ஆ) காஞ்சித்திணையின் பொருண்மையினை விவரிக்க. (CO2, K2)

18. (அ) களவியலில் தலைவிக்குக் கூற்று நிகழும் இடங்களை விவரிக்க. (CO3, K1)

(அல்லது)

(ஆ) ‘தோழி வரைவு கடாதல்’ குறித்துத் தொகுத்துரைக்க. (CO3, K1)

19. (அ) ‘கற்பியலில் தலைவி கூற்றுகள்’ – கட்டுரை வரைக. (CO4, K5)

(அல்லது)

(ஆ) கற்பில் தலைமகன்கூற்று நிகழும் இடங்கள் குறித்து விவரிக்க. (CO4, K4)

20. (அ) தலைவியின் பண்புநலன்களைக் குறித்துக் கட்டுரை வரைக. (CO5, K1)

(அல்லது)

(ஆ) உள்ளுறை வகைகள் பற்றி விரித்துரைக்க. (CO5, K4)

| R3487 |
|---|

| Sub. Code |
|---|
| 411303 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2025

### Third Semester

### Tamil

### சிற்றிலக்கியம்

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 1 = 10)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. செயங்கொண்டார் எந்த மான்னரின் அவைப்புலவராக இருந்தார். (CO1, K1)

   (அ) முதலாம் குலோத்துங்கன்

   (ஆ) முதலாம் மகேந்திரவர்மன்

   (இ) இரண்டாம் குலோத்துங்கன்

   (ஈ) கரிகாலன்

2. கலிங்கத்துப்பரணி ____________ தாழிசைகளை உடையது. (CO1, K1)

   (அ) 600 (ஆ) 599

   (இ) 699 (ஈ) 700

3. மூவருலாவில் இல்லாத நூல் எது? (CO2, K1)

   (அ) குலோத்துங்கச் சோழன் உலா

   (ஆ) விக்ரமச்சோழன்

   (இ) இராசராச சோழன் உலா

   (ஈ) திருக்கைலாய ஞான உலா

4. தக்கவத பரணியின் ஆசிரியர் யார்? (CO2, K1)

(அ) செயங்கொண்டார் (ஆ) ஒட்டக்கூத்தர்

(இ) தத்துவராயர் (ஈ) வைத்தியநாததேசிகர்

5. கலம்ப உறுப்புகள் எத்தனை? (CO3, K2)

(அ) 18 (ஆ) 12

(இ) 16 (ஈ) 20

6. குமரகுருபரர் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர் (CO3, K1)

(அ) 12 (ஆ) 19

(இ) 17 (ஈ) 15

7. சேக்கிழார் பிள்ளைத்தமிழின் ஆசிரியர்? (CO4, K1)

(அ) குமரகுருபரர் (ஆ) மீனாட்சி சுந்தரம்பிள்ளை

(இ) ஒட்டக்கூத்தர் (ஈ) செயங்கொண்டார்

8. ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பருவத்தில் இல்லாதது எது? (CO4, K2)

(அ) கழுங்கு (ஆ) சிறுதேர்

(இ) சிற்றில் (ஈ) சிறுபறை

9. திரிகூடராசப்பக் கவிராயரின் இயற்பெயர் _____________. (CO5, K2)

(அ) கவிராயர் (ஆ) இராசப்பன்

(இ) நடராசன் (ஈ) குற்றாலன்

10. குறுவஞ்சி என்பதன் பொருள் _____________. (CO5, K1)

(அ) அரளிக்கொடி (ஆ) வஞ்சிக்கொடி

(இ) பவளக்கொடி (ஈ) பாவைக்கொடி

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

11. (அ) மரங்களின் தோற்றம் குறித்துக் கலிங்கத்துப்பரணி வழி இயம்புக. (CO1, K1)

(அல்லது)

(ஆ) கலிங்கப் போர்க்களத்தில் காட்டின் இயல்பு குறித்து எழுதுக. (CO1, K2)

12. (அ) 'உலா' – குறிப்பு வரைக. (CO2, K2)

(அல்லது)

(ஆ) பேதைப் பருவம் குறித்து புலவர் நயம்பட உரைப்பதை விளம்புக. (CO2, K4)

13. (அ) கலம்ப இலக்கியத்தில் உள்ள உறுப்புகள் குறித்து எழுதுக. (CO3, K2)

(அல்லது)

(ஆ) மதங்கியார் தோற்றம் குறித்து விளம்புக. (CO3, K2)

14. (அ) மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பற்றிக் குறிப்பு வரைக. (CO4, K1)

(அல்லது)

(ஆ) 'கடல் சூழ்ந்த யாப்பு அமர்' எனத் தொடங்கும் பாடலின் கருத்தினை விளம்புக. (CO4, K1)

15. (அ) குற்றால நாதரின் பவனி குறித்து இயம்புக. (CO5, K5)

(அல்லது)

(ஆ) குறத்தி குறி கூறி தலைவியிடம் கேட்கும் பொருட்கள் யாவை? (CO5, K5)

## பகுதி இ (5 × 8 = 40)

**அனைத்து** வினாக்களுக்கும் 1000 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

16. (அ) காளிதேவியின் பெருமூச்சு ஏற்படுத்திய துன்பங்களை விவரிக்க. (CO1, K1)

(அல்லது)

(ஆ) கருணாகரத் தொண்டைமான் கலிங்க நாட்டை வென்ற சிறப்பைத் தொகுத்துரைக்க. (CO1, K2)

17. (அ) உலா இலக்கியத்தின் அமைப்பையும் சிறப்பையும் எடுத்துரைக்க. (CO2, K1)

(அல்லது)

(ஆ) இராசராசசோழன் சிறப்புகள் குறித்து தொகுத்துரைக்க. (CO2, K4)

18. (அ) சிவபெருமானுக்கும் பிச்சியாருக்குமுள்ள ஒற்றுமையை புலவர் எங்ஙனம் எடுத்துரைக்கிறார்? (CO3, K2)

(அல்லது)

(ஆ) கலம்பக இலக்கியத்தின் அமைப்பையும் சிறப்பையும் விவரிக்க. (CO3, K4)

19. (அ) ஆகமத்தின் பாதங்களும் விளக்கமும் பற்றி விரித்துரைக்க. (CO4, K1)

(அல்லது)

(ஆ) சேக்கிழார் பிள்ளைத்தமிழ் அமைப்பு குறித்து கட்டுரை வரைக. (CO4, K4)

20. (அ) குறத்தி கூறும் நாட்டு வளம் குறித்துக் கட்டுரைக்க. (CO5, K2)

(அல்லது)

(ஆ) குற்றால நாதரைப் போற்றும் சிங்கன் சிங்கியைப் பற்றி விவரித்து எழுதுக. (CO5, K5)

———————

| R3488 |
|---|

| Sub. Code |
|---|
| 411304 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2025

### Third Semester

### Tamil

### ஆராய்ச்சி நெறிமுறைகள்

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 1 = 10)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. தமிழ் இலக்கண இலக்கிய ஆய்வுத்துறையில் முன்னோடியாக விளங்கியவர் யார்? (CO1, K2)

   (அ) எஸ். வையாபுரிப்பிள்ளை

   (ஆ) இராகவையங்கார்

   (இ) க.கைலாசபதி

   (ஈ) மு. வரதராசனார்

2. ஆய்வு ———————— மையமிட்டு சிறப்பாக அமைகின்றது. (CO1, K2)

   (அ) சிக்கலை (ஆ) பொருள்

   (இ) சொல்லை (ஈ) நடையை

3. 'Field Research' என்ற சொல்லின் தமிழாக்கம். (CO2, K3)

   (அ) அறிவியல் ஆய்வு (ஆ) கலை ஆய்வு

   (இ) கள ஆய்வு (ஈ) வரலாற்று ஆய்வு

4. தரவு பகுப்பாய்வு எத்தனை வகைப்படும்? (CO2, K3)

   (அ) 3 (ஆ) 2

   (இ) 4 (ஈ) 5

5. ஆய்வாளர் தம் ஆய்வு தொடர்பான தரவுகளைப் பெற தகவலாளியுடன் தாமும் ஒருவராய் பங்கேற்காமல் உற்று நோக்குவது ————————. (CO3, K6)

(அ) பங்குபெறும் உற்றுநோக்கல்

(ஆ) பங்குபெறா உற்றுநோக்கல்

(இ) கட்டுப்பாடுடைய உற்றுநோக்கல்

(ஈ) கட்டுப்பாடற்ற உற்றுநோக்கல்

6. தன்னிச்சையாக நிகழ்வதை முறையாகக் கவனிப்பது ————————. (CO3, K6)

(அ) உற்றுநோக்கல் (ஆ) செயற்பாட்டாய்வு

(இ) நேர்காணல் (ஈ) பயன்பாட்டாய்வு

7. ஒரு சிக்கலான பொருளை பிரித்துப் பார்த்து பொருள் காண்பது ———————— ஆய்வாகும். (CO4, K3)

(அ) தனிநிலை ஆய்வு (ஆ) பகுப்பியல்

(இ) ஒப்பியல் (ஈ) அமைப்பியல்

8. உண்மை ஆய்வு என்று அழைக்கப்படும் ஆய்வு? (CO4, K3)

(அ) ஒப்பியல் (ஆ) அறிவியல்

(இ) வரலாறு (ஈ) பகுப்பியல்

9. சமூக ஆய்வில் பயன்படுத்தப்படும் இரு முக்கிய கருவிகள் ————————. (CO5, K3)

(அ) வினாநிரல், பட்டியல்

(ஆ) உற்றுநோக்கல், கருதுகோல்

(இ) கருதுகோல், வினாநிரல்

(ஈ) பட்டியல், உற்றுநோக்கல்

10. முறைசாரா நேர்காணல் என்று அழைக்கப்படும் நேர்காணல். (CO5, K3)

(அ) ஒரு முகப்படுத்தும் நேர்காணல்

(ஆ) கட்டமைப்பில்லா நேர்காணல்

(இ) பன்முறை நிகழும் நேர்காணல்

(ஈ) ஆழ்ந்த நேர்காணல்

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

11. (அ) 'ஆராய்ச்சியின் வரைவிலக்கணம்' - தருக. (CO1, K2)

(அல்லது)

(ஆ) சிக்கலை மையமிட்ட தலைப்புத் தேர்வு குறித்து எழுதுக. (CO1, K2)

12. (அ) 'கருதுகோள்' - இயம்புக. (CO3, K3)

(அல்லது)

(ஆ) ஆய்வு அணுகுமுறைகள் பற்றி விளம்புக. (CO3, K3)

13. (அ) 'கள ஆய்வு நெறிமுறைகள் குறித்துப் பகர்க' (CO2, K6)

(அல்லது)

(ஆ) நேர்காணல் விளக்கம் குறித்து எழுதுக. (CO2, K6)

14. (அ) வரலாற்று முறை ஆய்வினை விளம்புக. (CO4, K3)

(அல்லது)

(ஆ) அமைப்பியல் முறை ஆய்வினைக் கூறுக. (CO4, K3)

15. (அ) 'வினா நிரல்' என்பது யாது? (CO5, K3)

(அல்லது)

(ஆ) அடிக்குறிப்புகள் இடும் முறைகளை இயம்புக. (CO5, K3)

## பகுதி இ (5 × 8 = 40)

அனைத்து வினாக்களுக்கும் 1000 சொற்களுக்கும் மிகாமல் விடையளிக்கவும்.

16. (அ) ஆய்வாளனுக்குரிய தகுதிகள் குறித்துக் கட்டுரை வரைக. (CO1, K2)

(அல்லது)

(ஆ) 'ஆய்வுக் களங்கள்' - ஆராய்க. (CO1, K2)

17. (அ) ஆய்வின் வகைகள் குறித்துக் கட்டுரைக்க. (CO2, K3)

(அல்லது)

(ஆ) 'வினா' நிரலின் தன்மையும் வகைகளும் - தொகுத்துரைக்க. (CO2, K3)

18. (அ) உற்று நோக்கலில் ஏற்படும் சிக்கல்கள் குறித்துக் கட்டுரை வரைக. (CO3, K6)

(அல்லது)

(ஆ) கருதுகோளை உருவாக்கும் வாயில்கள் குறித்து விளக்கியுரைக்க. (CO3, K6)

19. (அ) அறிவியல் முறை ஆய்வினை ஆய்ந்துரைக்க. (CO4, K3)

(அல்லது)

(ஆ) அளவையியல் முறை ஆய்வினை விரிவாக எடுத்துரைக்க. (CO4, K3)

20. (அ) மேற்கோளும் துணைநூற் பட்டியலும் குறித்துக் கட்டுரைக்க. (CO5, K3)

(அல்லது)

(ஆ) பெண்ணிய ஆய்வு முறையினை விரிவாக விளக்குக. (CO5, K3)

———————

| R3489 |
|---|

| Sub. Code |
|---|
| 411305 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER – 2025

### Third Semester

### தமிழ்

### விருப்பப்பாடம் — ஊடகவியல்

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 1 = 10)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. பருவ இதழ்கள் எத்தனை வகைப்படும்? (CO1, K1)

   (அ) 5 (ஆ) 7

   (இ) 6 (ஈ) 4

2. இந்தியாவில் முதல் வார இதழ் வெளியிட்டவர் யார்? (CO1, K1)

   (அ) தாதாபாய் நௌரோஜி

   (ஆ) தேவேந்திரநாத் தாகூர்

   (இ) பாபா அகர்கர்

   (ஈ) ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி

3. இந்தியாவில் வெளியான முதல் செய்தித்தாள் எது? (CO2, K6)

   (அ) கல்கத்தா கெஸட்

   (ஆ) கல்கத்தா கிரானிகல்

   (இ) தி பாம்பே ஹெரால்ட்

   (ஈ) தி பெங்கால் கெஸட்

4. சென்னை கூரியர் (Madras Courier) என்ற நாளிதழை நிறுவியவர் யார்? (CO2, K6)

(அ) ரிச்சர்ட் ஜான்ஸ்டன் (ஆ) ஹக்பாய்ட்

(இ) ஜான் வில்லியம்ஸ் (ஈ) ராபர்ட்

5. இந்தியச் செய்தித்தாள்களின் தந்தை (CO3, K5)

(அ) ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி

(ஆ) தனுபாய் பிர்ஜே

(இ) தாதாபாய் நௌரோஜி

(ஈ) ஹக் பாய்ட்

6. 'இந்து' இதழை தோற்றுவித்தவர் யார்? (CO3, K5)

(அ) உ.வே. சாமிநாதய்யர்

(ஆ) சுப்பிரமணிய பாரதி

(இ) ஜி. சுப்பிரமணிய ஐயர்

(ஈ) பி. வரதராஜு ராயுடு

7. ETV - விரிவாக்கம்? (CO4, K5)

(அ) E - Television

(ஆ) Educational Television

(இ) Economic - Television

(ஈ) Environment

8. உலகின் முதல் பொதுப் பயன்பாட்டுக் கணினி எது? (CO4, K5)

(அ) ENIAC (ஆ) Super computer

(இ) Mini computer (ஈ) Mainframe computer

9. DTP என்பதன் விரிவாக்கம்? (CO5, K6)

(அ) Desktop publishing

(ஆ) Desktop publication

(இ) Doctor to patient

(ஈ) Desktop printer

10. உரையை பதிப்பிக்க பயன்படும் கருவி யாது (CO5, K6)

(அ) Text tool (ஆ) Type tool

(இ) Crop tool (ஈ) Hand tool

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

11. (அ) ஊடக வகைகளை எடுத்துரைக்க. (CO1, K1)

(அல்லது)

(ஆ) ஊடகத்தின் தோற்றம் வளர்ச்சி குறித்து விளம்புக. (CO1, K1)

12. (அ) 'தலையங்கம்' - எழுதுக. (CO2, K6)

(அல்லது)

(ஆ) இதழ்களின் சுதந்திரம் குறித்து இயம்புக. (CO2, K6)

13. (அ) வானொலி வளர்ச்சியின் தன்னாட்சித் திறத்தினைப் பகர்க. (CO3, K5)

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சித் தொடர்கள் சமூகத்தில் ஏற்படுத்திய விளைவுகளை மொழிக. (CO3, K5)

14. (அ) தகவல் மேலாண்மையில் கணினியின் பங்களிப்பினைக் குறிப்பிடுக. (CO4, K5)

(அல்லது)

(ஆ) இணையத்தின் பயன்கள் பற்றிச் சுட்டுக. (CO4, K5)

15. (அ) நேர்காணல் எடுக்கும் பயிற்சிக் குறித்து எழுதுக. (CO5, K6)

(அல்லது)

(ஆ) வலைப்பூக்களின் பயன்கள் பற்றிச் சுட்டுக. (CO5, K6)

## பகுதி இ (5 × 8 = 40)

அனைத்து வினாக்களுக்கும் 1000 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

16. (அ) 'ஊடகக் கோட்பாடுகள்' - விரித்துரைக்க. (CO1, K1)

(அல்லது)

(ஆ) இலக்கியங்கள் வாயிலாக அறியலாகும் தகவல் தொடர்பு முறைகள் குறித்துக் கட்டுரைக்க. (CO1, K1)

17. (அ) "இதழியலாளர்களின் தகுதியும் திறமைகளும்" - எடுத்துரைக்க. (CO2, K6)

(அல்லது)

(ஆ) இன்றைய தமிழ் நாளிதழ்களின் போக்கினைத் தொகுத்துரைக்க. (CO2, K6)

18. (அ) சமகாலச் சமுதாயத்தில் வானொலி ஏற்படுத்திய தாக்கத்தினை விவரிக்க. (CO3, K5)

(அல்லது)

(ஆ) 'வானொலியின் தோற்றமும் வளர்ச்சியும்' - கட்டுரைக்க. (CO3, K5)

19. (அ) இன்றைய காலகட்டத்தில் சமூக வலைதளங்களின் தாக்கம் குறித்து கட்டுரைக்க. (CO4, K5)

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சியின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிக் கட்டுரை வரைக. (CO4, K5)

20. (அ) வலையொலி பயன்படுத்துதல் குறித்துக் கட்டுரைக்க. (CO5, K6)

(அல்லது)

(ஆ) தலையங்கம் எழுதும் படிநிலைகளை விவரிக்க. (CO5, K6)

———————